பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 01 2025 **SATURDAY** **12.40 PM**, ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாட்டு மக்களிடையே இன்று உரையாற்றுகிறார்.

2. ஜனநாயகத்தின் கொண்டாட்டமாக வாக்காளர் தினம் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறுவதை தகுதியானவர்கள் அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கேட்டுக்கொண்டுள்ளார்

4. அமெரிக்கா உடனான நல்லுறவு வலுவாக உள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

5. நெதர்லாந்து சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்யானந்தா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

குடியரசு தினம் நாளை கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களிடையே இன்று உரையாற்றுகிறார்.

அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் வாயிலாக குடியரசுத் தலைவர் ஆற்றும் உரை இன்றிரவு ஏழு மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

குடியரசுத் தலைவரின் உரை முடிந்தவுடன், அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி இரவு மணி 9.30-க்கு ஒலிபரப்பு செய்கிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

இதற்கிடையே, தேசிய நிகழ்வுகளில் மக்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில், குடியரசு தின அணிவகுப்பை சிறப்பு அழைப்பாளர்களாக பார்வையிட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து அமைப்புகளின் தலைவர்கள், கைவினைக்கலைஞர்கள், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்ட பயனாளிகள் உள்ளிட்டோர் இதில் அடங்குவர்.

குடியரசு தின அணிவகுப்பை பார்வையிட தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய கள்ளக்குறிச்சி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் - 51 செகண்ட்ஸ்)*

இந்நிலையில், காவல் மற்றும் தீயணைப்புத்துறையில் சிறப்பாக பணியாற்றிய தொள்ளாயிரத்து இரண்டு பேருக்கான விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இந்தியா திகழ்வது பெருமைக்குரியது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பாக தேர்தல் பணிகளை மேற்கொண்டவர்களுக்கான விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

ஜனநாயகத்தின் அன்னையாகவும், நவீன உலக ஜனநாயகத்திற்கான எடுத்துக்காட்டாகவும் இந்தியா உள்ளது என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், ஜனநாயகத்தின் கொண்டாட்டமாக இந்த நாள் திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் பணிகளை தேர்தல் ஆணையம் சிறப்பாக மேற்கொண்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் விடுத்துள்ள செய்தியில், வாக்களிப்பது உரிமை மட்டுமன்றி, நம் அனைவரது கடமை என்று குறிப்பிட்டுள்ளார்.

தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் வெளியிட்டுள்ள செய்தியில், தேர்தல் ஆணையம் 75 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளதாக கூறியுள்ளார்.

இதன் காரணமாக, இந்த வாக்காளர் தினம் சிறப்பானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது 64 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தி உலக சாதனை படைத்திருப்பதாகவும் திரு ராஜீவ்குமார் கூறியுள்ளார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், அகில இந்திய வானொலி வாயிலாக விடுத்த செய்தியில், வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவதை தகுதியானவர்கள் அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - அர்ச்சனா பட்நாயக் - 62 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் கோடிக்கணக்கானோர் பங்கேற்று வருவதால், அம்மாநில அரசு விரிவான ஏற்பாடுகளை, மத்திய அரசோடு இணைந்து மேற்கொண்டுள்ளது.

மௌனி அமாவாசை தினமான வரும் 29-ஆம் தேதி பத்து கோடிக்கும் மேற்பட்டோர் கும்பமேளாவில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒரு பகுதியில், புனித நீராடுபவர்கள் பிற பகுதிகளுக்கு செல்லா வண்ணம் தடுப்புகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், கூட்ட நெரிசலை தவிர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

ஆற்றில தடுப்புகள், புனித நீராடுபவர்களை கண்காணிப்பதற்கென சிறப்பு காவலர்கள், கூடுதல் மின்விளக்குகள், கழிவறை வசதிகள், உடைகளை மாற்றுவதற்கான அறைகள் போன்றவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உடனுக்குடன் தூய்மைப்பணிகளை மேற்கொள்வதற்கென துப்புரவுப்பணியாளர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மகா கும்பமேளாவையொட்டி, மூன்று நாள் ட்ரோன் கண்காட்சி நேற்று தொடங்கியது.

உத்தரப்பிரதேச சுற்றுலாத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த கண்காட்சியில், நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் காட்சிப்படுத்தப்பட்டதாகவும், இது பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்ததாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

அரசு முறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ள இந்தோனேஷியா அதிபர் திரு **Prabowo Subianto,** இன்று பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்தினார்.

இதன்பின்னர் இருவரும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

இந்த பேச்சுவார்தததை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தோனேஷியா உடனான வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்த பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடல்சார் பாதுகாப்பு தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றும் அந்நாட்டுடன் கையெழுத்திடப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

கடல்பகுதிகளில் குற்றச்செயல்களை தடுக்கவும், மீட்புப்பணிகளை மேற்கொள்ளவும் இந்த ஒப்பந்தம் உதவிடும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

இந்தோனேஷியா அதிபர் பேசுகையில், இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேலும் அதிகரிப்பதற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று கூறினார்.

**<<<<<<>>>>>**

இமாச்சலப்பிரதேச தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

இமாச்சலப்பிரதேச முதலமைச்சர் திரு **Sukhvinder Singh Sukhu** இந்நாளையொட்டி **Baijnath** –ல் நடைபெறும் நிகழ்ச்சியில் 70 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கிவைக்கிறார்.

**<<<<<<>>>>>**

மத்திய அரசின் மின்னணு வர்த்தகத்திற்கான இணையதளம் மூலம், நடப்பு நிதியாண்டின் முதல் பத்து மாதங்களில் வர்த்தகம் நான்கு லட்சம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மத்திய அரசு நிறுவனங்கள் மின்னணு சந்தையை கூடுதலாக பயன்படுத்தியுள்ளதாக தொழில் மற்றும் வர்த்தகத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

குறிப்பாக, ஒரே நாளில் 49 ஆயிரத்து தொள்ளாயிரத்து 60 கொள்முதல் நடவடிக்கைகள் இந்த மின்னணு வர்த்தக சந்தை மூலம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

தேசிய சுற்றுலா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

<<<<<<>>>>>

அமெரிக்கா உடனான நல்லுறவு வலுவாக உள்ளதாக இந்தியா கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் தொடர்ந்து மேம்பட்டு வருவதாக கூறினார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும், திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

நெதர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்யானந்தா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

நான்கரை புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் நீடிக்கிறார்.

<<<<<<>>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று சென்னையில் நடைபெறுகிறது.

<<<<<<END>>>>>